Volume: 03 Issue 01 FEB: 2024

களஞ்சியம் - சர்வதேச தமிழ் ஆய்விதழ்
KALANJIYAM International Journal of Tamil Studies
E-ISSN : 2456-5148
www.ngmtamil.in

# தமிழ் இலக்கிய மரபுகளில் அங்கதம்

முனைவர் கோ. பத்மபிரியா, இணைப் பேராசிரியர் , தமிழ்த்துறை, நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு- 638052, padmapriyakss@gmail.com, https://orcid.org/0009-0007-5642-4282

## முன்னுரை

தனிப்பட்ட மனிதனின் குறையையோ ஒரு சமுதாயத்தின் குறையையோ, ஓர் இயக்கத்தின் குறையையோ குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ சுட்டிக்காட்டுவதை அங்கதம் என்பர். நகைச்சுவை உணர்வுடன் தொடர்புடைய இலக்கியங்களை அங்கத இலக்கியங்கள் எனலாம். மனிதன் விலங்குகளிடமிருந்து வேறுபடும் இடம் இதுவே. சிரிக்கவும், சிந்திக்கவும் நன்கு தெரிந்த விலங்கு மனிதன். இரவும் பகலும் தொடர்ந்து மாறி மாறி வரும் உலகில் மாறாமல் இருப்பது துன்பமும் துயரமும் தான்.

மனித இனம் தான் தோன்றியதில் இருந்து இன்று வரை ஒட்டு மொத்த சமூகமும் நிலைத்த இன்பத்தைக் கண்டடைய முயன்று, தோற்று அறியாமை இருளிலேயே சிக்கித் தவித்து வருகின்றது. அவ்வப்போது சிறந்த ஞானியர் தோன்றி நல்ல கருத்துக்களைக் கூறி மறைந்துள்ளனர். அவர்கள் வாழ்வை உற்று நோக்கும் போது அவர்களின் ஒட்டுமொத்த வாழ்விலும் நகைச்சுவை உணர்வு இழையோடி இருப்பதைக் காணலாம். அவ்வகையில் அமைந்த அங்கத இலக்கியம் பற்றிய கருத்துக்கள் இக்கட்டுரையின் மூலம் எடுத்துரைக்கப்படுகிறது.

## அங்கதத்தின் இயல்புகள்

அங்கதத்தின் இயல்புகளாக மேலைநாட்டு அறிஞர் ஹிகெட் கூறுவன.

1. உண்மையை படம் பிடித்துக் காட்டல்.
2. சம கால நடப்பினை வெளிக்காட்டுவதாக அமைதல்.
3. அதிர்ச்சி தரக்கூடியதாக அமைதல்.
4. வேடிக்கை கலந்ததாக இருத்தல்.
5. அங்கத இலக்கியத்தில் அடுத்து வரும் நிகழ்ச்சிகள் முன்னரே உய்த்துணர முடியாததாக இருத்தல் போன்றவைகளாகும்.

## அங்கதம் எழுதுவதற்கான காரணங்களாக ஹிகெட் கூறுவன.

1. மற்றவர்களை விடச் சமுதாயத்தின் மீது தீவிர வெறுப்பு உடையவராக இருப்பது.
2. தான் மற்றவரை விட ஒழுக்கத்தில் சிறந்தவனாக இருப்பதாக நினைப்பது.
3. சமுதாயத்தில் உள்ள குறைகளை நீக்க வேண்டும் என்ற ஆவல் கொள்வது

4. தனது பார்வைக்கு மட்டும் அக்கொடுமைகள் படுவதால் அவற்றை வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் உடையவனாக இருப்பது என்கிறார்.

இக்கூற்றின் வழி நாம் நோக்கும்போது அங்கதம் என்பது குற்றம் செய்தவனை எதிர்த்து வாதிடுவதாகவும், திருத்த வேண்டும் என்ற நோக்கம் உடையதாகவும், நகைச்சுவை மற்றும் ஏளனம்பட எடுத்துரைப்பதாகவும் அமைகிறது. இதில் கையாளப்படும் நகைச்சுவை பொழுதுபோக்கிற்காக மட்டும் அல்லாமல் குறைகளை வெளிப்படுத்திக் காட்டி அவற்றைத் திருத்துவதற்காகவும் தான் என்பது பெறப்படுகிறது.

**தொல்காப்பியரின் அங்கதக் குறிப்புகள்**

தொல்காப்பியர் செய்யுளியலில் ஏழுவகையான இலக்கியங்களைப் பற்றிக் கூறுகிறார்.

அவை

"பாட்டு உரை நூலே வாய்மொழி பிசியே

அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்" என்பனவாகும்.

இவற்றையே மீண்டும் ஒருமுறை கூறும் தொல்காப்பியர் அடிவரையறை இல்லாத ஆறினைத் தனியாகப் பிரித்து

"நூலினான உரையினான

நொடியோடு புணர்ந்த பிசியினான,

ஏது நுதலிய முதுமொழியான

மறைமொழி கிளந்த மந்திரத்தான,

கூற்றிடை வைத்த குறிப்பினான" (தொல்,பொருள், நூ.எண். 1421)

என்று கூறுகிறார்.

இதிலிருந்து பாட்டு என்பது அடிவரையறையோடு கூடியதென்றும், ஏனைய ஆறும் அடிவரையறையற்ற யாப்பு என்றும் விளங்குகிறது. மேலும், அங்கதம் என்பதை இங்கு 'கூற்றிடை வைத்த குறிப்பு' என்ற தொடரால் விளக்குவதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வகை இலக்கியத்தை விளக்கும் தொல்காப்பியர்

''எழுத்தொடும் சொல்லொடும் புணரா தாகிப்

பொருட் புறத் ததுவே குறிப்பு மொழியே'' (தொல்பொருள்,: நூ. எண்.1435)

என்று 'குறிப்பு மொழி' என்ற தொடரை அங்கதம் என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்துகிறார். மேலும் எழுத்தாலும் சொல்லாலும் வெளிப்படையாகக்

கூறாமல் குறிப்பால் புலப்படுத்துவதே இத்தகைய அங்கதம் என மொழிகிறார். இங்கு விளக்கப்படும் அங்கதம் என்பது அடிவரையறைக்கு உட்பட்ட வெண்பா யாப்பில் அமைந்த அங்கதம் என்னும் இலக்கிய வகைக்கு வேறான ஒன்றாகத் தொல்காப்பியரால் சுட்டப்படுகிறது. எனவே "தொல்காப்பியர் காலத்தில் இத்தகைய அங்கத மொழிகள் நாட்டுப்புற இலக்கியத்தில் பெருவழக்காக இருந்தன என்பதை உணரலாம் " (மு.அருணகிரி, தமிழ் இலக்கியத்தில் அங்கதம், ப.எண்.9)

### வெண்பா யாப்பில் அமைந்த அங்கதம்

அடிவரையறைக்குட்பட்ட வெண்பா யாப்பில் அமைந்த அங்கதம் தொல்காப்பியரால் விளக்கப்படுகிறது. வெண்பாவின் வகைகளைப் பற்றிக் கூற வரும் தொல்காப்பியர் குறுவெண் பாட்டு, நெடுவெண் பாட்டு கைக்கிளை, பரிபாடல், அங்கதம் எனும் ஐந்தினைக் கூறுகிறார். அங்கதம் என்பது இங்கு வெண்பாவின் வகைகளுள் ஒன்றாகக் கூறப்படுவது குறிக்கத் தக்கதாகும். கைக்கிளையும், அங்கதமும் பாடுபொருள் அடிப்படையில் பிரிக்கப்பட்ட வகைகளாகத் தோன்றுகின்றன. இங்கு தொல்காப்பியர் அங்கதம் பற்றிய விளக்கத்தைக் கூறவில்லை. மேலும் அங்கதத்தின் வகைகளைப் பிரித்துக் காட்டுகிறார்.

"அங்கதம் தானே அரில் தபத் தெரியின்

செம்பொருள் கரந்தது என இரு வகைத்தே" (தொல்.பொருள் நூ.எண்.1381) என்கிறார்.

'அடுத்துச் செம்பொருள் என்பதை வசை' என்றும், 'பழிகரப்பு என்பதை மொழி கரந்து சொல்லப்படும்' என்றும் தொல்காப்பியர் விளக்குகிறார்.

### செம்பொருள் அங்கதம்

"செம்பொருளாயின் வசையெனப்படுமே" என்கிறார் தொல்காப்பியர். ஒருவரது குற்றங்களை வெளிப்படையாகக் கூறுவது செம்பொருள் அங்கதம் ஆகும். இச்செம்பொருள் அங்கதத்தை வசை என்றே விளக்குகிறார். எனவே நேரடியாக வசைமொழி அமைந்தால் அது செம்பொருள் அங்கதம் ஆகிறது.

"செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்

அவியினும் வாழினும் என்" (குறள் எண்.420)

என்ற திருக்குறளை செம்பொருள் அங்கதத்திற்கு உதாரணமாகக் கூறலாம்.

### பழிகரப்பு அங்கதம்

"மொழி கரந்து சொல்லின் அது பழிகரப்பாகும்" என்கிறார் தொல்காப்பியர் வசையை வெளிப்படையாகக் கூறாது மறைமுகமாகக் கூறுவது பழிகரப்பு அங்கதமாகும்.

"பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்

பீழை தருவதொன் றில்" (குறள் எண்.839)

என்ற குறளை பழிகரப்பு அங்கதத்திற்கு சான்றாகக் கூறலாம்.

**செவியுறைக்கும் அங்கதத்திற்கும் உள்ள வேறுபாடு**

அங்கதத்தைப் பற்றி மேலும் ஒரு செய்தியைத் தொல்காப்பியர் கூறுகிறார். செவியுறைக்கும் அங்கதத்திற்கும் உள்ள வேறுபாட்டை இங்கு விளக்குகிறார். செவியுறைச் செய்யுளை விளக்கும் போது,

"புகழொடும் பொருளொடும் புணர்ந்தன் றாயின்

செவியுறைச் செய்யுள் என்மனார் புலவர்" (தொல்.பொருள். நூ.எண். 1385)

என்றும், அங்கதச் செய்யுளை விளக்கும்போது,

"வசையொடும் நசையொடும் புணர்ந்தன்றாயின்

அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்" (தொல்.பொருள், நூ.எண்.1386)

என்றும் கூறுகிறார்.

இதில் தொல்காப்பியர் செய்யுளை இருவகையாகப் பிரித்து, ஒன்று செவியறை என்றும், மற்றொன்று அங்கதம் என்றும் கூறி இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை விளக்குகிறார். பின்னர் செவியுறையை அங்கதத்திலிருந்து வேறாகக் கருதிய தொல்காப்பியர் மற்றோரிடத்தில் அதை விளக்குகிறார்.

"செவியுறை தானே,

பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பன்

அவிதல் கடன் எனச் செவியுறுத்தன்றே" என்கிறார்.

மேலும் அங்கதம் பற்றிக் கூற வரும் தொல்காப்பியர் பின்வருமாறு கூறுகிறார்.

1. அங்கதம் ஏழுவகை இலக்கியங்களில் ஒன்றாகப் பிரிக்கப்பட்டது.
2. அது எழுத்து, சொல்லால் அன்றிப் பொருளால் குறிப்பாகப் புலப்படுத்தப்படுவது.
3. அடிவரையறையுடைய இலக்கியங்களில் வெண்பா யாப்பில் அமைந்த அங்கதம் வசை என்று கூறப்படும். அது நேரடியாகக் கூறும் செம்பொருள், மறைமுகமாகக் கூறும் பழிகரப்பு என்று இரு வகைப்படும்.
4. அங்கதச் செய்யுள் செவியுறைச் செய்யுளிலிருந்து வேறுபட்டதாகும் என்று அவர் கூறுவது இங்கு நோக்கத் தக்கதாகும்.

**முடிவுரை**

தொல்காப்பியர் கூற்றுப்படி அங்கதம் ஏழுவகை இலக்கியங்களில் ஒன்று என்றும் அது எழுத்து சொல்லால் அன்றி பொருளால் குறிப்பாகப் புலப்படுத்தப்படுவது என்பது புலனாகிறது. அடிவரையறையை உடைய இலக்கியங்களில் வெண்பா யாப்பில் அமைந்த அங்கதம் வசை என்றும், அது நேரடியாகக் கூறும் செம்பொருள் என்றும் மறைமுகமாகக் கூறப்படும் பழிகரப்பு என்றும் இருவகைப்படும் என்பதும் அங்கதச் செய்யுள் செலியுறைச் செய்யுளிலிருந்து வேறுபட்டதாக அமைகிறது என்பதையும் நாம் அறிய முடிகிறது. இத்தகைய தமிழ் இலக்கிய மரபுகள் கவிஞனின் போக்கிற்கு ஏற்ப இக்கால இலக்கியங்களிலும் ஒரு சில மாற்றங்களோடு மலர்வது வரவேற்கத் தக்கதாக அமைகின்றது.

**பார்வை நூல்கள்**


1. மு.அருணகிரி
   தமிழ் இலக்கியத்தில் அங்கதம்,
   கிரியேட் பதிப்பகம்,
   மதுரை.
   1994

2. திருக்குறள்
   பரிமேலழகர் உரை
   முதல் பதிப்பு
   1997

3. தொல்காப்பியம்
   தொகுதி -3
   மணிவாசகர் பதிப்பகம்
   சென்னை
   முதல்பதிப்பு
   செப்-2003